பக்கங்கள் எட்டு

விலை ரூபா: 5.00

வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
திருப்பதி
பல்பொருள் வாணிபம்
திருநெல்வேலி சந்தையடி
உரிமையாளர்;
செல்வரட்ணம் (ஆமி)
லாலாசோப் அச்சுவேலி
(985)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை01 வியாழக்கிழமை (16-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 332

★ நோர்வேயின் சமாதான முயற்சிக்கு வலுவூட்ட

# பிரி. வெ. விவ. அமைச்சர் ஹெயின் 21ம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்

## ஜனாதிபதி சந்திரிகா; ரணில்; தமிழ்கட்சித் தலைவர்களையும் சந்திப்பார்

(நமது நிருபர்)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை தொடர்பாக அரசினதும் எதிர்க்கட்சிகளினதும், தமிழ்க்கட்சிகளினதும் தற்போதையநிலைப்பாடுகள் குறித்து விரிவான முறையில் ஆராய்வதற்குபிரித்தானியவெளிவிவகாரஅமைச்சரும்மற்றும்காமன்வெல்த்விவகாரங்களுக்குப்பொறுப்பான அமைச்சருமான பீற்றர் ஹெயின் இம்மாதம் 21 ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு வரவுள்ளார் எனகொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வே அரசின் சமாதான முயற்சிகள் தொடரும் இவ்வேளையில் இவரது கொழும்பு விஜயம் முக்கியத்துவம் பெறுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இம் மாதம் 21 ஆம் திகதி கொழும்புவரவிருக்கும் பிரித்தானியவெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் தமிழ்க் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையின் வெளிவிவ

(8ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அடுத்த மாதம் யாழ் வருவர்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சிப்பாராளு மன்ற உறுப்பினர்கள் அடங்கியகுழுவொன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளது தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் வரும் இவர்கள் ஒருவாரகாலம் இங்கு தங்கியிருந்து யாழ் நிலவரங்களை நேரில் கண்டறிவர். (ந)

## பதுளையில் 20பேர்கைது

(கொழும்பு)

பதுளை நகரத்தில் நேற்று பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 5 பெண்கள் உட்பட 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

மட்டக்களப்பு கொக்கட்டிசோலையிலிருந்து வந்த விடுதலைப் புலிகள் பலர் பதுளை கடைகளில் வேலை செய்வதாக கிடைத்த தகவலை அடுத்தே நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்து 20 பேரைக் கைதுசெய்தனர். (ந-5)

## சொட்டு மருந்து வழங்கும் போது புலிகள் யுத்த நிறுத்தம் செய்வர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவிருக்கும் சிறுவர்களுக்கான 2ஆம்கட்ட போலியோ சொட்டுமருந்து வழங்கும் நிகழ்வை முன்னிட்டு, இம்மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு 12மணிமுதல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நள்ளிரவு வரை விடுதலைப் புலிகள் மோதல்தவிர்ப்பைக் கடைப்பிடிக்கவுள்ளனர்.

இதன் பிரகாரம் புலிகள் யுனிசெவ் நிறுவனத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம், 28 ஆம் திகதிகளில் முதலாம் கட்ட சொட்டுமருந்து வழங்கும் போதும் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்திருந்தமை யாவரும் அறிந்ததே. (ஸ்ரீ)

## நெடுந்தீவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாய் மகப்பேறின்போதுமரணம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு 10ம் வட்டாரத்தை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான திருமதி ரவிச்சந்திரன் தவம் குழந்தைப் பிரசவத்தின் போது நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

நேற்று முன்தினம் யாழ். வைத்தியசாலையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; பிரஸ்தாப பெண் குழந்தை பேற்றிக்காக நெடுந்தீவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கு சிகிச்சை பலனளிக்காததைஅடுத்துபடகுமூலம்யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு மரணமாகி உள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் நெடுந்தீவிற்கும்இடையிலான போக்குவரத்து சீராக இடம்பெற்றிருக்குமாயின் இத்தகையபரிதாபகரமானமரணம் ஏற்பட்டிருக்காதென்று பல

(8 ஆம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர்கள் படையில் சேரக்கூடாது

### விடுதலைப்புலிகள் கோரிக்கை

கிழக்குமாகாண முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தில் இணைய வேண்டாமென விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவினர் கேட்டுள்ளனர்.

தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு முஸ்லிம் இளைஞர்கள் இராணுவத்தில் இணையக்கூடாதெனவும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு படைத்தரப்பு கேட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ந)

★ யாழ்-பல்கலைக்கழக

## கலை-வர்த்தக பீடமாணவர்கள் கோஷ்டி மோதல்,ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று நண்பகல் கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கும், முகாமைத்துவவர்த்தக பீடஇரண்டாம், இறுதி வருட மாணவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டதில் இறுதியாண்டு மாணவர் ஒருவர் கன்னத்தில் கடுங்காயமடைந்துள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களை கனிஷ்ட மாணவர்கள் மதிப்பதில்லை. என்பதனால் ஏற்பட்ட இம்மோதலில் முகா

(8 ம்பக்கம் பார்க்க.)

## கல்கிசை கடற்கரையில் 75 காதல் ஜோடிகள்

### பொலிஸாரால் கைது

கல்கிசை, மொறட்டுவ கடற் கரைப் பகுதியில் இளவயதுடைய 75 காதல் ஜோடிகள் நேற்று முன்தினம் மொறட்டுவ பொலிஸாரினால்கைதுசெய்யப்பட்டுகாவலில்வைக்கப்பட்டுள்ளனர். கடற்கரையில் உல்லாசமாகப் பொழுது போக்கச் சென்ற இளம் ஜோடிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள். கைது செய்யப்பட்ட இந்த ஜோடிகளில் 12 ஜோடிகள் பாடசாலை மாணவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. மொறட்டுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இந்த இளம் ஜோடிகளின் பெற்றோர்கள் நேற்றுக் காலை பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## விமானப் பயணச்சீட்டு இன்று வழங்கப்படும்

''றான்'' அலுவலகத்தில் பயண அனுமதி இலக்கம் பெற்றவர்களுக்கான விமானப் பயணச் சீட்டு இன்று காலை 10 மணியளவில் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் வைத்து விமானப் படையினரால் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நாளை விமானசேவை ஆரம்பமாகு மென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## யாழ் மாநகர சபையின் குழுக் கூட்டம் இன்று!

### மேயராக ரவிராஜ் பதவியேற்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பல்வேறு குழுக்களின் கூட்டம் இன்றுபதில்மேயரான ரவிராஜ் தலைமையில் நடைபெறும்.

யாழ்மாநகரசபையின் நிதிக்குழு, சுகாதாரக்குழு, மராமத்துக்குழு ஆகியகுழுக்களே இன்று காலை கூடவுள்ளன.

யாழ்மாநகரசபையின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதென்றும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ் மாநகர சபையின்பிரதிமேயர் ரவிராஜ் சபையின் புதிய மேயராகவும், உறுப்பினர் கந்தையன் பிரதி மேயராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ்

# செய்தித் துளிகள்

## சடலம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

குருநாகல் பிரதேசத்தில் சேற்றில் வீசப்பட்டதாக கருதப்பட்ட இனம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலம் போடப்பட்டிருந்த இடத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டதாகவும் இது மூன்று நாட்களுக்கு முன்னர் போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்த நபருடையது எனச் சந்தேகிக்கப்படும் காற்சட்டை ஒன்றும் பயணப்பை ஒன்றும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாய்க்கால் கட்டப்பட்டது

(இருபாலை)

சேப்பாப்பெற்ற பகுதியில் நீண்டகாலமாக இழுபறி நிலையில் கட்ட முடியாதிருந்த நீர்ப்பாசன வாய்க்கால் வாறு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இடம்பெற்ற அபிப்பிராய வேறுபாட்டினால் கட்டமுடியாதிருந்த இவ்வாய்க்கால் பல சிரமங்களுக்கு மத்தியிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது. (க 2)

## மயானம் புனரமைப்பு

(புலோலி)

கரவெட்டி பிரதேசசபைப் பகுதியில்உள்ள கரம்பாவெளி மயானம் புனரமைக்கப்பட்டு புதிய மயானமடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 வருடங்களாக சவனிப்பாரற்றுக்கிடந்த இம்மயானத்தை, சுமார் 2 இலட்சம் ரூபா செலவில்கரவெட்டிப் பிரதேசசபையினர்புனரமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-52)

## திருட்டு

(புலோலி)

புலோலிப்பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைஒன்று ஊரடங்கு வேளையில் உடைக்கப்பட்டு, 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் பொருட்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக கடை உரிமையாளர் பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்துள்ளார் (உ-52)

## விளக்கமறியலில் வைக்கஉத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி(வரதர்அணி) யின் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சவறுதலான வெடி விபத்து தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் இடம்பெற்றது.

இவ் விசாரணையின் போது ஈ பி ஆர் எல்.எவ் இன் உறுப்பினரான நாகமுத்து- நாகேந்திரம் எனபவரை நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஸ்ரீ-12)

## 75 வது ஜெயந்திவிழா

(புலோலி)

பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவின் 75 வது ஜெயந்தி தின விழா நிகழ்ச்சிகள், இம்மாதம்23 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை 'சாயி மந்திரில்' இடம் பெறும். (உ-52)

## சைவசமய விசேட தீட்சை வழங்கல்

(நல்லூர்)

அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் ஆலய இந்து மன்றத்தினரால் வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை ''சைவசமய தீட்சை விசேட தீட்சை'' என்பன அளிக்கப் பெறவுள்ளதாக, வட- பிராந்திய இந்துப் பேரவையின் செயலர், தர்ம தீபம் ப. சிவலோகநாதன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 10. 00 மணிக்கு, இந் நிகழ்வு இடம் பெறவுள்ளதாகவும்விசேட தீட்சை பெற விரும்புவோர், ஸ்நானம் செய்யத் தகுந்த வகையில், மாற்று உடுப்புகளையும் கொண்டுவருதல் வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் (உ-103 24)

## நீதியான விசாரணை வேண்டும்

ஊடகவியலாளர்கள் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக நீதியான சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோரி தனிநபர் பிரேரணை ஒன்றினை ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பு மாவட்ட எம்.பி. ரவிகருணாநாயக்கா கொண்டு வரவுள்ளார்.

பத்திரிகையாளர் றோகண குமார, மயில்வாகனம் நிமலராஜன, ரமேஸ் நடராஜா ஆகியோர் கொல்லப்பட்டது தொடர்பாக இதுவரையும் விசாரணைக் கமிஷன் எதுவும் நியமிக்கப்படவில்லை யாதலால் இப் பிரேரணை கொண்டுவரப்படவிருப்பதாக ரவிகருணநாயக்கா தெரிவித்தார். (வ)

## கத்தரிக்காய் திருடர்

(புலோலி)

கரவெட்டிப் பகுதியில் கத்தரிக்காய் திருடர்களின் தொகை அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு நேரத்தைப் பயன்படுத்தி தோட்டத்தினுள் நுழையும் கள்வர் கூட்டம் கத்தரிக்காயை பிடுங்குவதோடல்லாமல் பயிர்களையும் நாசமாக்கிச் செல்வதாக பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் கத்தரிக்காய் கள்வர்களை கையும் மெய்யுமாகப் பிடித்து உரிய தண்டனைகள் வழங்க பாதிக்கப்பட்டோர் ஒன்றுபட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-52)

## மதில் அமைப்பு

(கல்வயல்)

கொக்குவில் பிறவுண் வீதியில் இயங்கும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி முன்பக்கத்தில் புதிதாக மதில் அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் முனபு இருந்த பதில் முற்றாகச் சேதமாகியிருந்தது.

கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகள் அகற்றிய பின்னர் கல்லூரியின் முன்பக்கப் பாதை திறக்கப்பட்டு செயற்படத் தொடங்கியிருப்பதை அடுத்து புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

புதிய கற்கை நெறிகள் எதிர்வரும் தைமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-ச-111)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

## சங்கானை

| | |
|---|---|
| 156875 ஏ | 156875 பி |
| 143930 ஏ | 166478 ஏ |
| 166770 ஏ | 169154 ஏ |
| 169154 பி | 169422 ஏ |
| 170426 ஏ | |

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 142683 ஏ | 156655 எ |
| 156655 பி | 161285 ஏ |
| 161285 பி | 161285 சி |
| 161285 டி | 161185 ஈ |
| 161429 ஏ | 161429 பி |
| 161625 பி | 161625 சி |
| 163307 ஏ | 163307 பி |
| 163307 சி | 163307 டி |
| 163307 ஈ | 163307 எவ் |
| 163307 ஜி | 163637 ஏ |
| 163637 பி | 166124 ஏ |
| 166124 பி | 166124 சி |
| 166124 டி | 1661[illegible] ஏ |
| 166133 பி | 166133 சி |
| 166133 டி | 166133 ஈ |
| 166133 எவ் | 166169 ஏ |
| 166169 பி | 166211 ஏ |
| 166233 ஏ | 166233 பி |
| 166233 சி | 166233 டி |
| 166297 ஏ | 166298 ஏ |
| 166300 ஏ | 166300 ஏ |
| 166327 ஏ | 166327 பி |
| 166417 ஏ | 168318 ஏ |
| 166318 பி | 168440 ஏ |
| 168440 பி | 168440 சி |
| 168480 ஏ | 168480 பி |
| 168480 சி | 168480 டி |
| 168480 ஈ | 168480 எவ் |
| 168483 ஏ | 168483 பி |
| 168483 சி | 168483 டி |
| 168487 ஏ | 168493 ஏ |
| 168493 பி | 168510 ஏ |
| 168532 ஏ | 168532 பி |
| 168548 ஏ | 168548 பி |
| 168548 சி | 168550 ஏ |
| 168558 ஏ | 168568 ஏ |
| 168568 பி | 168568 சி |
| 168579 சி | 168600 ஏ |
| 168602 ஏ | 168603 ஏ |
| 168611 ஏ | 168611 பி |
| 168617 ஏ | 168619 ஏ |
| 168619 பி | 168620 ஏ |
| 168626 ஏ | 168626 பி |
| 168626 சி | 168628 ஏ |
| 168629 ஏ | 168629 பி |
| 168629 சி | 168662 ஏ |
| 368662 பி | 168662 சி |
| 168662 டி | 168672 ஏ |
| 168694 ஏ | 168694 ஏ |
| 168696 பி | 168696 சி |
| 168696 டி | 168696 ஈ |
| 168696 எவ் | 168697 ஏ |
| 168967 பி | 168697 சி |
| 168697 டி | 168697 ஈ |
| 168702 ஏ | 168702 பி |
| 168711 ஏ | 168718 ஏ |
| 168720 ஏ | 168720 பி |
| 168720 சி | 168739 ஏ |
| 168739 பி | 168743 ஏ |
| 168750 எ | 168750 பி |
| 168754 ஏ | 168754 பி |
| 168789 ஏ | 168794 எ |
| 168794 பி | 168801 ஏ |
| 168926 எ | 168942 ஏ |
| 168942 பி | 168945 ஏ |
| 168945 பி | 171657 ஏ |
| 171658 ஏ | 171659 ஏ |
| 171663 ஏ | 171664 ஏ |
| 171666 ஏ | 171669 ஏ |
| 171670 ஏ | 171680 ஏ |
| 171725 ஏ | 171726 ஏ |
| 171730 ஏ | 171821 ஏ |

## கோப்பாய்

| | |
|---|---|
| 156735 ஏ | 156791 ஏ |
| 1572 8 ஏ | 157358 ஏ |
| 162972 ஏ | 162972 பி |
| 163718 ஏ | 167540 ஏ |
| 167540 பி | 167563 ஏ |
| 167574 ஏ | 167574 பி |
| 167588 ஏ | 167588 பி |
| 167603 ஏ | 167603 பி |
| 167608 ஏ | 167608 பி |
| 167608 சி | 167608 டி |
| 167608 ஈ | 167621 ஏ |
| 167621 பி | 167632 ஏ |
| 167712 ஏ | 167714 ஏ |
| 167714 பி | 167714 சி |
| 167714 டி | 167714 ஈ |
| 167716 ஏ | 167716 பி |
| 166360 ஏ | 166360 பி |
| 168335 ஏ | 168525 ஏ |

## நல்லூர்

| | |
|---|---|
| 145689 ஏ | 156868 ஏ |
| 156868 பி | 156869 ஏ |
| 156874 ஏ | 156874 பி |
| 156967 ஏ | 157164 ஏ |
| 157552 ஏ | 157552 பி |
| 162843 ஏ | 162843 பி |
| 162858 ஏ | 162858 பி |
| 162858 சி | 167534 ஏ |
| 167564 ஏ | 167564 பி |
| 167564 சி | 167606 ஏ |
| 167606 பி | 167606 சி |
| 167611 ஏ | 167611 பி |
| 167626 ஏ | 167674 ஏ |
| 167674 பி | 167751 ஏ |
| 167751 பி | 167755 ஏ |
| 167757 ஏ | 167757 பி |
| 167758 ஏ | 167758 பி |
| 167758 சி | 167758 டி |
| 167759 ஏ | 167759 பி |
| 167760 ஏ | 167764 ஏ |
| 144331 ஏ | 144331 பி |
| 144331 சி | 144331 டி |
| 144331 ஈ | 150036 ஏ |
| 163474 ஏ | 165979 ஏ |
| 165979 பி | 165979 சி |
| 165979 டி | 165979 ஈ |
| 166083 ஏ | 166083 பி |
| 166083 சி | 166152 ஏ |
| 166152 பி | 166152 சி |
| 166182 ஏ | 166182 பி |
| 166182 சி | 166182 டி |
| 166182 ஈ | 166238 ஏ |
| 166238 பி | 166315 ஏ |
| 166315 பி | 166315 சி |
| 166315 டி | 166317 ஏ |
| 166317 பி | 166317 ஏ |
| 166317 டி | 166318 ஏ |
| 166318 பி | 166318 சி |
| 166337 ஏ | 166337 பி |
| 166337 சி | 166361 ஏ |
| 166361 பி | 166361 சி |
| 166361 டி | 168042 ஏ |
| 168229 ஏ | 168229 பி |
| 168312 ஏ | 168312 பி |
| 168375 ஏ | 168517 ஏ |
| 168517 பி | 168517 சி |
| 168530 ஏ | 168530 பி |
| 168555 ஏ | 168555 பி |
| 168652 ஏ | 168658 ஏ |
| 168671 ஏ | 168671 பி |
| 168673 ஏ | 168673 பி |
| 168691 ஏ | 168691 பி |
| 168700 ஏ | 168703 ஏ |
| 168703 பி | 168705 ஏ |
| 168705 பி | 168705 சி |
| 1687 5 டி | 168760 ஏ |
| 168760 பி | 168792 ஏ |
| 168856 ஏ | 168856 பி |
| 168:56 சி | 168879 ஏ |
| 168879 பி | 168888 ஏ |
| 168900 ஏ | 168900 பி |
| 168908 ஏ | 171665 ஏ |
| 177731 ஏ | 171732 ஏ |
| 171734 ஏ | 171735 ஏ |
| 171768 ஏ | 171781 ஏ |
| 165922 ஏ | 166730 ஏ |
| 166730 பி | 169139 ஏ |
| 169179 ஏ | 169179 பி |
| 169179 சி | 169184 ஏ |
| 169284 பி | 169284 சி |
| 169329 ஏ | 169329 பி |
| 169329 சி | 169329 டி |
| 169329 ஈ | 169329 எவ் |

## சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 167625 ஏ | 165526 ஏ |
| 165526 பி | 165526 சி |
| 165842 ஏ | 169403 ஏ |
| 189403 பி | 170085 ஏ |

## தெல்லிப்பழை

| | |
|---|---|
| 167709 ஏ | 164275 ஏ |
| 164275 பி | 164275 சி |
| 165896 ஏ | 166563 ஏ |
| 166563 பி | 166562 சி |
| 166563 டி | |

## உடுவில்

| | |
|---|---|
| 157199 ஏ | 157199 பி |
| 157391 ஏ | 157391 பி |
| 157391 சி | 167510 ஏ |
| 167510 பி | 167556 ஏ |
| 167605 ஏ | 167620 ஏ |
| 197710 ஏ | 167717 ஏ |
| 167717 பி | 167717 சி |
| 167729 ஏ | 167729 பி |
| 166790 ஏ | 169326 ஏ |
| 170405 ஏ | 170205 பி |
| 170405 சி | 170405 டி |
| 170418 ஏ | |

இம்மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் வெளியான க.பொ.த(சாத) தமிழ்மொழியும இலக்கியமும் வினாத்தாளிற்கான விடைகள்:

1) 3. காடு
2) 4. துன்பம்
3) 3. காய்
4) 1. வானகம்
5) 2. தபுதாரன்
6) 1. தங்கப்பதக்கம்
7) 4. தலைவர்
8) 2. அம்புயம்
9) 3. சுவர்க்கம்
10) 2. சமுகமளிக்கவில்லை
11) 1. கொல்
12) 2. அவ்விடம்
13) 3. மரை
14) 1. கலகல
15) 2. ஞ், ன், ம், ஏ, ஆ
16) 1. ஆ. ஓ
17) 1. வரிசை
18) 2. பன்றி, புலி
19) 2. யானைகள் கட்டும் இடம்
20) 4. நாற்று
21) 2. நூறு விடயங்களை அவதானிப்பவர்
22) 3. இலத்தி
23) 1. அரைக்கொத்தரிசி அன்னதானம் விடிய விடிய மேளதாளம்
24) 3. வரகு
25) 2. சடற்கரை
26) 4. உவமை
27) 3. அன்னக் கூட்டம்
28) 1. நண்டுகள்
29) 3. பண்புத்தொகை
30) 2. வளரா
31) 3. புத்தகங்களையும் நனைத்தான்.
32) 4. பாரதியாரால் கூறப்பட்டது.
33) 1. நிரம்பவில்லை.
34) 3. சித்தியடைந்தான்
35) 4. ''கலா பவனம்'' 15, மலே வீதி கண்டி வடக்கு கண்டி.
36) 1. அவரல்லர்
37) 3. அத்துணையளவிற்கு அறிவு வளரும்.
38) 4. ஐம்பொறிகளாகும்.
39 3. இ, அ, ஈ, ஆ, உ
40) 4. ஆ, உ, ஈ, இ, அ

இம்மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் வெளியான க. பொ. த (சா த) தமிழ் மொழியும் இலக்கியமும், வினாத்தாளிற்குரியவிடைகள்

| | | |
|---|---|---|
| 1) 4 | 2) 2 | 3) 4 |
| 4) 2 | 5) 1 | 6) 1 |
| 7) 2 | 8) 3 | 9) 2 |
| 10) 1 | 11) 1 | 12) 2 |
| 13) 1 | 14) 3 | 15) 2 |
| 16) 3 | 17) 4 | 18) 2 |
| 19) 4 | 20) 4 | 21) 3 |
| 22) 3 | 23) 2 | 24) 3 |
| 25) 2 | 26) 1 | 27) 4 |
| 28) 3 | 29) 4 | 30) 3 |
| 31) 2 | 32) 4 | 33) 1 |
| 34) 1 | 35) 3 | 36) 4 |
| 37) 2 | 38) 4 | 39) 4 |
| 40) 2 | | |

## பிரிவுத் துயர் பகிர்வு

### எஸ். கே. மயில்வாகனம்

(முன்னாள் சாவகச்சேரி நகரசபைத் தலைவர், தினகரன் டெயிலி நியூஸ் பத்திரிகை நிருபர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட க .மயில்வாகனம் 14.11.2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று கொழும்பில் நடை பெற்றன.

தகவல் எம். கே. ஜீவகதாஸ்
பத்திரிகையாளர்.

### சின்னத்தம்பி. கமலேந்திரராசா (சின்னராசா)

5ஆம் ஒழுங்கை அரசடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி.கமலேந்திரராசா (சின்னராசா) நேற்று காலமானார். அவரது ஈமக்கிரியைகள் நேற்றைய தினம் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

தகவல்- குடும்பத்தினர்

# இரத்த உறவுகளை காணத் துடிக்கும் தென்மராட்சி மக்களின் அவலவாழ்வு நீங்குமா?

2000 மேமாதம் 10-ம்திகதி அசாதாரணசூழ்நிலைகாரணமாக தென்மராட்சி மேற்கு, சாவகச்சேரி நகரப் பகுதி மக்கள் வாழ்வு, நிம்மதி அற்ற ஒன்றாகியது. மக்கள் மீண்டும் தமது நிம்மதியான வாழ்வை நினைத்துப்பார்க்கக்கூட முடியவில்லை, அத்துடன் தென்மராட்சி கிழக்குப்பகுதி மக்களுக்கும் அவ்வாறானதொரு நிலையே உருவாகியது. ஆனையிறவிலிருந்து நாவற்குழி வரையான பரந்துபட்ட நெற் செய்கை நிலங்கள், தோட்டநிலங்கள் வான் பயிர் வளங்கள் என்பன தொடர்ந்தும் கைவிடப்பட வேண்டிய சூழ்நிலையே நிலவுகிறது.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் வடமராட்சி, வலிகாமம் தீவுப்பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து உயிர் வாழ்வதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து வருகிறார்கள். தொழில் இழப்பு, நிலபுல வருமானங்கள இழப்பு, வீடு வாசல்களில் வைத்திருந்த பொருட்கள்இழப்பு என்பவற்றுடன் பலர்தமது உறவுகளை காலனிடம் பறி கொடுத்தும் உள்ளனர். சிலர் உறவினர் எங்கு இருக்கிறார்கள் என தெரியாத நிலையில் வாழ்கிறார்கள்.

**சி. ஜெயகணேஷன்**

தற்போது தோன்றியுள்ள மழை காலம் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த தென்மராட்சி மக்களுக்கு பெரியதொரு சுமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தத்தமது உறவுகளைக் காணத் துடிக்கும் அதேவேளை வாழ்வாதார தேவைகளுக்கு அந்நியரிடத்தில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது வரை அவர்களுக்கு ஆதரவு நல்கி உதவிகள செய்து பதுகாத்த மக்கள் தொடர்ந்தும் எவ்வளவு காலத்துக்கு இவ்வாறு பராமரிக்க வேண்டி வருமோ என்று சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.

1996 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது தென்மராட்சி-பளைப்பகுதி பெருந்தொகையான மக்கள் கூட்டத்தை பாதுகாத்து தாங்கியது. அதற்கு அப்பகுதி வளங்கள் போதுமானவையாக இருந்தன. வலிகாமப் பகுதியுடன் ஒப்பிடும் போது சனத்தொகை செறிவு குறைந்த பகுதியாக தென்மராட்சி விளங்கியதாலும் நீர் வளம் நிலவளம் மற்றும் பௌதீக வளங்களைக் கொண்டு பெருமளவு மக்களுக்கு குடியிருப்புக்கள், உணவு, தொழில்' பொழுதுபோக்கு, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க(சாவகச்சேரிப்பகுதி மக்களுக்கு முடிந்தது அவ்வாறு செய்வதற்குவடமராட்சி வலிகாமப் பகுதிகள் ஏற்றதாகஇல்லை. தீவுப்பகுதியில் ஓரளவு நிலவளம், தொழில் வளம் உண்டெனினும் அங்கு செல்வதற்கு தென்மராட்சி மக்கள் அவ்வளவாக விருப்பப்படவில்லை. அதனால் தத்தமது இடங்களுக்கு திரும்பிச் செல்வதிலேயே அவர்கள் தமது முயற்சிகளை முடுக்கி விட்டுள்ளனர். ஆறு மாதங்களுக்கு முன் தமது நிம்மதியான வாழ்வை வாழ்ந்த தென்மராட்சி மக்கள் அத்தகைய சூழ்நிலை ஏற்படுவதையே தற்போது தமது தலையாய விருப்பமாகக் கொண்டுள்ளனர்.

## வாகனத்தில்வந்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

### மாத்தளை நீதிமன்றில் சம்பவம

(கொழும்பு)

மாத்தளை நீதிமன்றில், விசாரணைகளை எதிர் கொள்ளவென வாகனத்தில் வந்த குழுவினர் மீது வேறோர் வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஐவர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

பலியாகியோர் தரப்பினர் பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எதிர்த் தரப்பினர் இருவர் படுகாயமடைந்தனர்.

கொலைக் குற்றம் ஒன்றின் விசாரணைகளுக்காக வாகனத்தில் வந்தவர்களே துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுந்தர பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 20 ஆம் திகதி கொடுப்பனவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் நேற்றுமுதல் வழங்கப்படவிருந்த இடம் பெயர்ந்த மக்களுக்கான ரூபா2000 கொடுப்பனவு தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கப்படவில்லை.

இக் கொடுப்பனவுகள் எதிர் வரும் 20 ஆம் திகதி திங்கள் முதல் வழங்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஞா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (ச-120)

## மனிதஉரிமைகள்மதிப்பில் படையினர் அசிரத்தை

### பாதுகாப்பு உயர்பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குச்- கிழக்குப் பகுதிகளில் பணிபுரியும் படையினரும் பொலிஸாரும் மனித உரிமைக் கோட்பாடுகளை மதிப்பதில்லை என பாதுகாப்பு உயர் பீடம் கவலை வெளியிட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் கடமையாற்றும் படை மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு மனித உரிமைகளை கவனத்தில் கொள்ளத்தக்க வகையிலான விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், அவர்கள் இதனை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டாது இருப்பதாகவும் பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

முக்கியமாக வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை பகுதிகளில் மனித உரிமைகள மதிப்பதுதொடர்பான அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## தீவகத்தில் இலவச பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பரணம் தீவகம் லயன்ஸ்கழகங்கள், இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் 19 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை காலை 9.00மணிமுதல் பிற்பகல் 2-00மணிவரை ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் பாடசாலையில் நடைபெறும்.

யாழ். வைத்தியசாலை வைத்திய பரிசோதகர் கலாநிதி குலநாயகம்,வைத்திய பரிசோதனை மேற்கொள்ளவுள்ளார்.

பாடசாலை மாணவர்,மற்றும் பொதுமக்கள் இரத்த அழுத்தம்,சலரோகம், மார்புப்புற்றுநோய், வாய்ப்புற்றுநோய்,கண்பரிசோதனை போன்ற பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்சப்படுகிறது.

ஊர்காவற்றுறை மக்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்என்று தெரிவிக்கப் படுகிறது (க)

## ஆதாரமற்ற'விஷம பிரச்சாரத்தைமறுத்து தீவக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் கூட்டறிக்கை

இம் மாதம் 7 ஆம் திகதி வலம்புரிபத்திரிகையில்''தீவக கூட்டுறவுச்சங்கம்'' தொடர்பாக வெளியான செய்தி குறித்துவேலணை ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு, ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் தமது சங்கங்களின் நிலைப்பாடு குறித்து விரிவாக விளக்கி அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளன.

அவ்வறிக்கை இங்கு அப்படியேதரப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த நிலையில் அடிப்படை நிதி வசதியும், மூலாதார பொருளாதார வசதியும் அற்ற நிலையில் தீவுப்பகுதி சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும்.

1996ஆம் ஆண்டுசங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது குறைந்தளவு சனத்தொகையே குறிப்பிட்ட சங்கங்கள் கொண்டிருந்தன. நிதி வசதியும், பொருள் வசதியும் அற்ற நிலையில் ஆரம்பிக்கப்பட்டசங்கங்கள் பணிப்பாளர்களினதும். பணியாளர்களினதும், கூட்டுறவுத் திணைக்களத்தினதும் தன்னலமற்ற சேவையினால் படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ளது.

யாழ். மாவட்டகூட்டுறவுத் திணைக்களமும், அவை சார்ந்தஏனைய ஊழியர்களினதும் உ. அ அதிபரினதும் நேரடிக் கண்காணிப்பிலும் தீவக சங்கங்கள் இயங்கி வருகிறது.

இந்நிலையில் வளர்ந்து வரும் தீவகச் சங்கங்களின் வளர்ச்சி கண்டு மனம் பொறுக்க முடியாத ஒருவர் எழுதிய தவறான புகாரை தீவக சங்கங்கள் குறிப்பாக ஊர்காவற்றுறை, புங்குடுதீவு நயினாதீவு, வேலணைசங்கங்கள் மறுப்பதுடன் ஆதார மற்ற விஷம பிரசாரத்தையும் கண்டிக்கிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

### கலந்துரையாடல்

அண்மைக்கால பத்திரிகைச் செய்திகள் சில தொடர்பாகவும், கூட்டுறவுத் துறையின் நிலைப்பாடு தொடர்பாகவும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் ப. நோ.கூ. சங்க தலைவர்களும்,பொது முகாமையாளர்களும் கலந்து கொள்வார்கள். (க)

### ஈழத்து

இந் நாட்டுக்கூத்திலே வடமோடி, தென்மோடி, வட்டுக்கோட்டைவடமோடிபரபு ஆட்டங்கள் எனப் பல்வேறு கூத்துமரபிலே உள்ள ஆட்டங்களும் கலந்து இடம்பெறுகின்றன. இதனாலேயே நெறியாளர் இதனை ஆட்டநாட்டுக்கூத்து எனக் குறிப்பிடுகின்றார். ஒப்பனை முறையிலே தென்மோடிக்கூத்துச் சாயலே தென்படுகிறது. வேட உடைகளும் அவ்வாறே அமைகின்றன. காட்சி விதாணிப்புப் பண்புகள் திறம்பட அமைந்துள்ளன. அரங்கப் பொறிமுறையில் யானையை மேடையிலே உயிரோட்டமாக இயங்கவைத்தல், அரியாத்தயின்பிணம் எரியும் காட்சி எல்லாம் உணர்வோடு ஒன்றியமைந்துள்ளன. ஒளி, ஒலி அமைப்புக் கோளங்கள் நாட்டுக்கூத்தின் முழுவெற்றிக்கும் பங்களிப்புச் செய்துள்ளன.

### கற்புடைய மங்கையர்

வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்து சமூக மத்தியிலே ஏற்படுத்தும் படிப்பினையை நோக்கும்போது ஈழத் தமிழரின் முதல் வீராங்கனையாக அரியாத்தை காட்சி தருகின்றாள். கற்புநெறிக்கடம்பூண்டு வாழும் பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்றகருத்து வலியுறுத்தப்படுகிறது. யானை அரியாத்தயைக் கண்டு மண்டியிட்டு அடங்குவதும், கட்டுப்பட்ட வேலப் பணிக்கன் கயிறு தானாக அறுபடுவதும், பாம்பு வழிவிடுவதும் அரியாத்தையின் கற்புத் திறானாலேயே என்று காட்டப்படுகிறது. நிலவுடமைச் சமுதாயத்திலே பெண் எவ்வாறு இழிவுபடுத்தப்பட்டாள். ஆண் வர்க்க ஆதிக்கம் எவ்வாறு மேலாணமை பெற்றுக் காணப்பட்டது. பெண் சாதனை புரிவதை பொறுக்காத ஆண்வர்க்கம் அவளை எவ்வாறு நஞ்சிட்டுக்கொல்கிறது. ஆனால் வேலைப் பணிக்கன் ஒப்பாரியில் அரியாத்தைக்கு நஞ்சிட்டது யாரென்பது புலப்படுத்தப் படவில்லை. இக்கூத்தில் நீலப்பணிக்கனும், நீலகேசரியுமே அதற்கு உடந்தையாக அமைகிறார்கள். நாட்டுக்கூத்துக்கதை நெறியாள்கைக்காக நெறியாளர் அவ்வாறு செய்தாரோ தெரியாது. சகுனம் பார்த்தல் வீரர்களை கௌரவித்தல், திருமணம், பில்லி பேய் சூனியம், உடன்கட்டை ஏறுதல் எனும் சமூக பண்பாட்டுச் செய்திகளும் பேசப்படுகின்றன. ஆனால் பெண் ஒப்பாரிக்குப் பதிலாக ஆண் (வேலப் பணிக்கன்) ஒப்பாரி வைப்பதும் வேலப்பணிக்கனே உடன்கட்டை ஏறுவதும் மரபு மாற்றங்களாக இக் கூத்திலே இடம்பெறுகின்றன. எமது பாரம்பரிய அரசாட்சிமுறை, பொருளாதாரம், நிர்வாக அமைப்பு வரலாறு என்ற இத்தியாதி அம்சங்களையும் இந் நாட்டுக்கூத்து அறிய வைக்கின்றது. (க)

## இராசி பலன்

16-11-2000
(கார்த்திகை 1, வியாழன்)
பஞ்சமி மா. 6.12 வரை
புனர்பூசம் மு.இ 11.15 வரை
ராகுகாலம் 1.38- 3.08
சுபநேரம் 7 38- 9.08
அமிர்தம், கரிநாள்

**மேடம்**
மகிழ்ச்சியான சம்பவம், பிரயாணம், தனவரவு செல்வாக்கு, அரச நன்மைக் குறைவு.

**இடபம்**
வாக்குக்கலகம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம், வீண்பயம்.

**மிதுனம்**
புத்திய பொருள் சேர்க்கை தெளிந்த சிந்தை, உடல் நலம், போசன சுகம்.

**கடகம்**
பிரயாணம், தனவிரயம், உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம்.

**சிங்கம்**
நண்பர்கள் சந்திப்பு, சந்தோசமான செய்தி, பொருள் வரவு, புகழ், ரோகம்.

**கன்னி**
மற்றவர்களால் மதிக்கப் படல், முயற்சிகள் கைகூடும், தொழில் மேன்மை, அதிகாரம்.

**துலாம்**
கட்டுப்படுதல், பிரயாணம், வயிற்றுக் கோளாறு, மன அமைதியின்மை.

**விருச்சிகம்**
சிறு ரோகம், எதிர்பாராத கலகம்,பிரயாணத் தடங்கல், அச்சம்.

**தனுசு**
சுவாரஸ்யம், பிரயாணம், வாகன வசதி, போசனசுகம், கௌரவம்.

**மகரம்**
முயற்சி விருத்தி, சந்தோசமான சம்பவம், நோய்குணமடைதல், சத்துரு ஜெயம்.

**கும்பம்**
மனக்கிலேசம், காரியத் தாமதம், அதிகாரிகள் உதவி, வியாதி.

**மீனம்**
நிலை மாற்றம், ரோகம், நம்பிக்கைக் குறைவு, தாய் வழி உறவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# முகம்சழுவச் சென்றவர் கிணற்றுள்வீழ்ந்துமரணம்

## கோப்பாய் தெற்கில் சம்பவம்

(இருபாலை)

சத்திரசிகிச்சைக்கு வைத்திய சாலைக்குச் செல்வதற்காக அதிகாலை வேளை முகம் கழுவ கிணற்றடிக்குச் சென்றவர் கிணற்றுள் வீழ்ந்து மரணமானார்.

டச்சுவீதி, கோப்பாய் தெற்குப்பகுதியில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் அதே யிடத்தைச்சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம் (வயது 82) என்பவரே மரணமானவராவர்.

மரண விசாரணையைமேற் கொண்ட சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவன் விபத்து மரணமென்று தீர்ப்புவழங்கினார். (க-2)

# செம்மண் ஏற்றியவர் இளைஞரிடம் பிடிபட்டார்

(இருபாலை)

கோப்பாய் வடக்கு பகுதியில் மாலை வேளையில் திருட்டுத்தனமாக செம்மண் ஏற்றிக் கொண்டிருந்த லொறி உரிமையாளர் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்டார்.

இவ்வாறு திருட்டுத்தனமாக செம்மண் ஏற்றுவது தவறு என்று நயமாக சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை இப்பகுதியில் செம்மண் ஏற்றுவதாயின் கோப்பாய் பிரதேச செயலகத்தில் முன் அனுமதி பெற வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-2)

# ஆயிரத்து நூறு குடும்பங்களுக்கு சேவையாற்றும் போரூட்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணமாவட்டத்தில் எட்டு பிரதேச செயலர்கள் பிரிவுகளில் சமூக அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல் செய்துவரும் நோர்வே நாட்டு அரசசார்பற்ற நிறுவனமாகிய போரூட் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இவற்றுள் 587 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புகள், 862 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் 4 பொது மலசலகூடங்கள், 92 தனித் தனி கிணறுகள் மற்றும் 26 பொதுக் கிணறுகளையும் ஊர்காவற்றுறை, வேலணை, சாகானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, பருத்தித் துறை, கரவெட்டி மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர்கள் பிரிவுகளில் அமுல் செய்துள்ளது.

மேலும் இப்பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 59 கிராமிய மட்ட நிறுவனங்களுக்கு அடிப்படை உதவி களையும், 50 கிராமியவங்கி கள் மூலம் 3 ஆயிரத்து 500 உறுப்பினர்களுக்கு சேமிப்புக் களையும், கடன் திட்டங்களையும் வழங்கியுள்ளது என போரூட் நிறுவனத்தின் அதிகாரிகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் 99 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சியையும், 43 பாலர் பாடசாலைகளுக்கு பாலர்களுக்கான தளபாடங்களையும் விளையாட்டு உபகரணங்களையும், 150 சுகாதாரத் தொண்டர்களுக்கான அடிப்படைப் பயிற்சியையும், 21 கிராமங்களில் கிராமிய நூலகங்களையும் செயல்படுத்தியுள்ளது.

இவை தவிர அரச பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகள் புனரமைப்புப் பணிகளிலும் கணிசமான பங்களிப்பினையும் வழங்கியுள்ளதாக அறியப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் 17 பாடசாலைகளை புனரமைப்புச் செய்து தரமுயர்த்தியுள்ளது. 13 அரசாங்க வைத்தியசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களையும், 3 வைத்தியசாலைகளைத் தரமுயர்த்தியும் வழங்கியுள்ளது.

இவை தவிர யாழ். மாவட்டத்தில் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட 30 இடம் பெயர்ந்தோர் நலன் பேணும் முகாம்களில் குடிநீர் மற்றும் சுகாதார அடிப்படை வசதிளையும். வழங்கியுள்ளதுடன் 10 முகாம்களில் 30 மலசலகூடங்களையும் 5 கிணறுகளையும் அமைத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்

மேலும் சங்கானையில் போரூட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள 'கொம்டெக்' எனும் தொழில் நுட்ப அமைப்பின் மூலம் 116 இளைஞர்களுக்கு தொழில் சார் பயிற்சிகளையும் வழங்கியுள்ளது: எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மது ஒழிப்பு, சூழல் பாதுகாப்பு, மரம் நடுகை போன்ற துறைகளிலும் போரூட் நிறுவனம் பல்வேறு திட்டங்களையும் அமுல் படுத்தியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது. (க-77)

# நேற்று இலங்கைவந்த "ஒளித்தீபம்" புகையிலைஆபத்திலிருந்துமீட்கவாம்

(கொழும்பு)

புகையிலையின் அபாயத்திலிருந்து தென்கிழக்காசியாவைப் பாதுகாக்கும் நடவடிக்கையின் ஒரு அம்சமாக நேற்று ''ஒளித்தீபம்' இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

இத்தீபம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தின் அனுசரணையுடன் தென்கிழக்கு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

சென்ற ஜனவரி மாதம் 8 ஆம்திகதி புதுடில்லியிலிருந்து புறப்பட்ட இந்த ''ஒளித் தீபம்'' பல இடங்களுக்குக் கொண்டு சென்றபின் இலங்'கைக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கையிலுள்ள அனைத்து இடங்களுக்கும் இத்தீபம்எடுத்துச்செல்லப்பட்டதன் பின்னர் இம்மாதம் 30ஆம்திகதிமாலை தீவுக்குக் கொண்டு செல்லப் படவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இளைஞர்கள் சிகரெட்டுக் களையும், மதுபானங்களையும் பாவிப்பதனால் வரும் தீமைகளை விளக்குமுகமாகவே இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க - வி)

# நோயாளர் உணவு பெறுவதில் பெரும் சிரமமுறுகின்றனர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர் வேளா வேளைக்கு உணவை பெற்றுக் கொள்வதில் பெரும் சிக்கல் நிலையை எதிர் நோக்குவதாக தெரிவிககப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிககபபடுவதாவது; குறிப்பிட்ட வைத்தியசாலையில் தங்கசிகிச்சை பெறும் நோயாளருககு சீரான உணவு விநியோகம் மேற்கொள்ளப் படுவதாகவும் ஆனால் சில வேளைகளில் இவர்களுக்கான உணவு வழங்கலில் சில முறைகேடுகள் நடப்பதாகவும் பரவலாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தூரஇடங்களிலிருந்து வந்து தங்கி சிகிச்சை பெறும் நோயாளர் பெரும் அவலநிலையை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதுகுறித்து சம்பந்தப்பட்டோர் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக் கப்படுகிறது. (க-75)

# கோஷ்டி மோதலில் 14 பேர் காயம்

## கொச்சிக் கடையில் சம்பவம்

(கொழும்பு)

கொச்சிக் கடை மருதானைப் பகுதியில் இருகோஷ்டியினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தில் கைக் குண்டு வீசப்பட்டதிலேயே 14 பேரும் காயமடைந்துள்ளதாகவும் இவர்கள் அனைவரும் நீர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பற்றிய விபரம் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகவும் விரைவில் இவர்களை கைது செய்யவுள்ளதாகக் கொச்சிக்கடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் கல்கிசைப் பகுதியில் இடம் பெற்ற குண்டு வீச்சு சம்பவம் ஒன்றில் இருவர் காயமடைந்த அதே வேளை திவிலிப்பிட்டிய பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழத்துள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக திவிலிப்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (க-05)

### பயிற்சி வகுப்பு

கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தினால் நடத்தப்படும் பண்ணையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று கடந்த 15ஆம் திகதி உடுப்பிட்டி யிலுள்ள இமையாணன் வீரகத்தி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (உ-52)


## 31-ம் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 23 - 08 - 1920 மறைவு 17 - 10 - 2000

### அமரர் திருமதி செல்லையா நல்லம்மா

அவர்கள்

(சன்சைற் எறக்கிளினேர்ஸ் ஸ்தாபகரின் மனைவி)

தாளாத கீர்த்தியோடு தரணியில் வாழ்ந்தாயம்மா!
தரமுடன் மக்கள் வாழ தவத்தினைச் செய்தாயம்மா!
சூழாமல் எம்மை துன்பம் சுபீட்சங்கள் சேர்த்தாயம்மா!
சூரிய பிரகாசமாய் நல் ஒளி பெருகிற்றம்மா!
மாளாத சோகம் சூழ எங்கே மறைந்தீர்களம்மா!
மக்களும் சுற்றமும் புலம்ப எமையேன் பிரிந்தீரம்மா!
நாளெல்லாம் எண்ணி வாழ நற்பணிகள் செய்தீரம்மா!
நலமுடன் சிவன் தாளில் சேர நாமிங்கு
பிரார்த்திக்கின்றோமம்மா!

16 – 11 – 2000 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்குநடைபெறும் அமரரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

30/2 மருகடி வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(கி-1031)


# மூதூர் கிழக்கு நோக்கி படையினர் எறிகணை வீச்சு பொதுமகன் தலைசிதறிபலி

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற மூதூர் கிழக்கு பகுதி மீது இராணுவத்தினர் கடந்த திங்கள் மேற்கொண்ட கண் மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் தலை சிதறிப் பலியானார்.

மூதூர் கிழக்கின் கூனித்தீவு சூளைக்குடா, சம்பூர் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட இவ்எறிகணைத் தாக்குதலினால் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் அச்சம் காரணமாக பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருப்பதாக தெரியவந்துள்ளது.

எறிகணை வீச்சினால் வீடுகள் பல சேதமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு எம்.பியின்

# படுகொலை நிகழ்வானது ஜனநாயக விரோத நடவடிக்கையே

## ஈ.பி.ஆர்.எல்.எவ். தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் பேராதரவுடன் தெரிவுசெய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தின் படுகொலையானது மக்களின் உணர்வுகளைக் கொல்லும் ஒரு ஜன நாயக விரோத பாசிச நடவடிக்கையாகும்.

இவ்வாறுஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்)யின் சார்பாக தி.ஸ்ரீதரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

நிமலன் சௌந்தரநாயகம் ஆசிரியராக, குடும்பத்தலைவராக, அரசியல்வாதியாக செயற்பட்டவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் என்னென்ன பணிகள் எந்தெந்த இடங்களில் செயற்படுத்த வேண்டுமோ, அவற்றையெல்லலம் அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு கலந்துரையாடிவிட்டு வரும்போது நிராயுதபாணியானஇவர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இப்படியாக சமூகஈடுபாடுள்ளவர்கள் படுகொலை செய்யப்படும் போது யார் தான் சமூகத்திற்கு உழைக்க முன்வருவார்கள். இத்தகைய படுகொலைகள் முடிவுக்கு கொண்டுவரப்படாத வரை எமது சமூகம் அழிவுப்பாதையில்பயணிப்பதை எவரும் தடுத்து நிறுத்திவிடமுடியாது.

இத்தகைய பொறுப்பு வாய்ந்த உணர்ச்சியுள்ள மனிதரின்மறைவுக்குஎமது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவிக்கின்றோமென அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க-ஸ்ரீ)

## இன்று ஒரு தகவல்

# துறவி தந்த விளக்கம்

ஓர் ஊரில் துறவி ஒருவர் இருந்தார். அவர் அந்த ஊர் மக்களை எல்லாம் நல்லொழுக்கம் பொருந்தியவர்களாக மாற்றவேண்டும் என்று விரதம் எடுத்துக் கொண்டு அதற்காகவே வாழ்ந்து வந்தார். அவர் எதையும் வெறுமனே போதிப்பதுடன் நின்றுவிடாமல், சில நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு அறிவு புகட்டுவது வழக்கம்.

ஒரு நாள் அவர் பொதுமக்களிடம் பிச்சை எடுத்து சிறிது பணம் திரட்டினார். அந்தப் பணத்தைக் கூலியாகச் சிலருக்கு கொடுத்து, ஒரு பெரிய பாறாங்கல்லை ஒரு மலையின் மீது ஏற்றச் செய்தார்,

கூலியாட்கள் கூலியை வாங்கிக்கொண்டு அந்தப் பாறாங்கல்லை மிகவும் கஷ்டப்பட்டு மலையின் மீது ஏற்றிவிட்டார்கள். துறவி அந்த மலை மேல் ஏறி கூலியாட்கள் மிகவும் சிரமப்பட்டு மலை மீது ஏற்றியபாறாங்கல்லைஅங்கிருந்து கீழே உருட்டிவிட்டார். இது போலவே தினமும் நடந்தது.

துறவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்த மக்கள் அவரிடம் விளக்கம் கேட்டார்கள். அதற்கு அவர் தந்த விளக்கம் இது தான்.

''வாழ்க்கையில் மனிதன் நல்லொழுக்கத்தோடு கொஞ்சம் கொஞ்சமாகக் கஷ்டப்பட்டு முன்னேறுவதைக் காட்டுவதற்காகப் பாறாங்கல்லை மலைமேல் ஏற்றச் சொல்கிறேன். அப்படி ஏறியவர்கள் தவறிக் கீழே விழுவதற்கு அதிக நேரம் ஆகாது என்பதைக் காட்டுவதற்காகத்தான் அதை என் கையால் மீண்டும் கீழே தள்ளி விடுகின்றேன். அப்படி விழுபவர்கள, திரும்பவும் எழுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் மறுபடியும் கூலி கொடுத்துச் சிரமப்பட்டு மலைமேல் பாறையை ஏற்றச் செய்கிறேன்'' என்றார் துறவி.

அவரது செயலில் ஆழ்ந்த ஓர் உண்மை இருப்பதை மக்கள் அப்போது புரிந்து கொண்டார்கள்.

நன்றி
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

# யுத்த அவலம் தொடர்ந்தாலும் மாணவர் கல்வி தடைப்படக்கூடாது

## யாழ். பல்கலை கலைப்பீடாதிபதி தெரிவிப்பு

(அரியாலை)

குண்டுச் சத்தம் கேட்டாலும் யுத்தம் தொடர்ந்தாலும் மாணவர் நம்பிக்கை இழக்க கூடாது. வெட்ட வெட்ட தழைக்கும் கலாசாரத்தை கொண்ட எமது சமூகத்தின் எதிர்காலச் சந்ததியினராகிய மாணவருக்கு இடைவிடாத முயற்சி அவசியம்.

யாழ். இணுவில் மத்திய கல்லூரியின் பரிசுத்தினம், அதிபர் துரை எங்கரசு தலைமையில் சரஸ்வதி கலையரங்கில் அண்மையில்நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இன்றைய பாடப்புத்தகங்கள் உண்மையைச் சொல்வதில்லை. வரலாறு கண்மூடித்தனமாக திரிவுபடுத்தப்பட்டு இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு, சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தமானது என்ற பொய்மைத் தோற்றம் சிறார்கள் உள்ளங்களில் பதிப்புஏற்படுத்துகிறது என்று குறிப்பிட்டார்

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஆறுதிருமுருகன் உரையாற்றுகையில்.

கல்விச் சாலைகளில் கருணையைவளர்க்க வேண்டும். எமது பண்பாட்டில் இருந்து விலகாது பாரம்பரிய விழுமியங்களை பேண வேண்டும். என வேண்டுகோள் விடுத்தார். (உ-106)

## சிறுவர் தின விழா

(ஊர்காவற்றுறை)

காரைநகர் விளானை முன்பள்ளியும் திக்கரை முன்பள்ளியும் இணைந்து நடத்திய சிறுவர் தினவிழாவும், விளானை சனசமூக நிலைய 17 வது ஆண்டு நிறைவு விழாவும் மேற்படி நிலைய முன்றலில் இளைப்பாறிய அதிபர் கே. தில்லையம்பலம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (உ)

## குழாய்க் கிணறு அமைப்பு

(கல்வியங்காடு)

கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் காமாட்சிஅம்பாள் மடத்துக்குப் புதிதாய் குழாய்க் கிணறு அமைக்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

இதன் மூலம் இப் பகுதியில் நிலவி வந்த குடி தண்ணீர் பற்றாக்குறை நீங்கும் என நம்பப்படுகிறது. (உ-54)

## 67 வது பிறந்ததின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசா மற்றும் முன்னாள் பதிவளர் வே.நா..சிவராசா ஆகியோரின் 67 வது பிறந்தநாள் நினைவுகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது,

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பதில் நிதியாளர் க கனகரத்தினம் யாழ். பல்கலைக்கழக முன்னாள மருத்துவ பீடாதிபதி பேராசியர் செ. சிவஞானசுந்தரம் உட்பட கல்வியாளர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்துகொள்வார்கள், (க)

# வரி சேகரிப்பாளரால் பி. சபை தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைஉப அலுவலக வருமானவரி சேகரிப்பாளர் அப் பகுதி மக்களுடன் கடுமையானமுறையில்நடந்து கொண்டமைக்காக வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் அம் மக்களிடம் மன்னிப்புக்கோரியுள்ளார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; மேற்படி வருமானவரி சேகரிப்பாளர் தனது பிரிவிலுள்ள முதலி கோவில் பகுதிமக்களிடம் குடிநீர் வரியை அறவிடச் சென்ற போது அவர்களுடன் கடுமையான முறையில் நடந்து கொண்டதுடன்தகாதவார்த்தைகளினால் ஏசியுள்ளார். இதனை அப்பகுதி மக்கள் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவரிடம் தெரியப்படுத்தினர். இரு தரப்பினரையும் விசாரித்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களிடம் பிரதேச சபைத் தலைவர் மன்னிப்புக் கோரியதுடன், இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாது எனவும் உறுதியளித்தார்

இதே வேளை வருமானவரி சேகரிப்பாளரை எச்சரித்தது ன் மக்களுடன் அன்பாக, பண்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ந-2)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை 78 பேருக்கு வழங்கப்படும்

(அரியாலை)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை, இம்முறை, கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 78 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கையினை, வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளர் சகல பாடசாலைக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் இரு மாணவர்களை தெரிவு செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பிவைக்குமாறு அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-106)

# வங்கிக் கிளையில் பாதுகாப்பு பணிபுரிந்த பொலிஸ் சுட்டுக் கொலை

[மட்டக்களப்பு]

காத்தான்குடி இலங்கை வங்கிக் கிளையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்திபோகத்தர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்

நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பலியானவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சத்தர்ரஞ்சித் என அடையாளம் காணப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவம் காயமடைந்துள்ளார். இச்சம்பவத்தின் எதிரொலியாக காத்தான்குடி நகரப்பகுதியில் பதற்றம் மிகுந்து காணப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் உடன் மூடப்பட்டன.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுக் கொலை தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-ச-60)

## க. பொ. த. (சாதாரண தர) பரீட்சை

# மட்டக்களப்பிலிருந்து 15 ஆயிரம் பேராம்

(மட்டக்களப்பு)

எதிர் வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் மட்டக்களப்புமாவட்டத்தில் இருந்து 15 ஆயிரத்து 766 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்களுள் 6 ஆயிரத்து 270பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 9 ஆயிரத்து 496 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர்.

இம் மாவட்டத்தில், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 55 நிலையங்களிலும், வாழைச் சேனையில் 7 நிலையங்களிலும், பட்டிருப்பில் 40 நிலையங்களிலுமாக 102 நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது.

இத்துடன் 13இணை நிலையங்களும் இங்கு அமைக்கப்படவுள்ளது.

இப்பரீட்சை மார்கழி மாத 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-60)

# மோட்டார் சைக்கிளில் சென்று திருடும் ஆசாமிகள்

## கோப்பாயில் சம்பவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி. இராச வீதிப் பகுதியில் புதிய பாணியில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் புதிய M.P. 90 புதிய மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் மேய்ந்து கொண்டிருந்த மறி ஆடு ஒன்றைக் காலை மடித்து உரப்பையில் போட்டு ஒருவர் மடியில் வைத்தவாறே ஆட்டுடன் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றுள்ளனர். இந் நிகழ்வைப் பலர் கண்டும் இது குறித்து நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கோப்பாய், மத்திய பகுதியில் கூடுதலாக ஆடுகள், மாடுகள், கோழிகள் என்பன திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின்றன.

குறிப்பாக உள்ளூரிலுள்ள திட்டமிட்ட சிலர் குழுவாக இணைந்து இச்செயலில் ஈடுபடுவதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-79)

## மரநடுகை வாரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளமரநடுகை வார நிகழ்வுகள் அங்குள்ள 12 பிரதேச செயலக பிரிவுகளிலும் உரிய முறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. (உ-60)

## நவாலியில் திருடர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்று திருடர்களினால் அண்மையில் களவாடப்பட்டுள்ளது.

நண்பகல் வேளை ஆலயவளவில் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆலயத்திற்குள்சென்ற இளைஞர்ஒருவரின் சைக்கிளே இனம் தெரியாத நபர்களினால் களவாடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் கொக்குவில் மேற்குப் பகுதியில் இரவு எட்டு மணி அளவில் வீட்டு முற்றத்தில் உள்ள மரம் ஒன்றில் ஏறியிருந்த திருடன் மரக்கிளை முறிந்ததில் கீழே விழுந்து தப்பி ஓடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அந்த வீட்டில் இடம்பெற இருந்த திருட்டு முயற்சி தோல்வி அடைந்துள்ளது.

மேலும் அதே தினத்தன்று கொக்குவில் பகுதியில் இளம் பெண்ணை மிரட்டி திருடன் தங்கச்சங்கிலி ஒன்றை அபகரித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இளவாலை றோ. க.

# ஆண்கள் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

## இருவர்மட்டுமே நிரந்தரம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலைக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப் படாதது குறித்து பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை இயங்கும் இவ் ஆரம்பப்பாடசாலையில் 158 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இப்பாடசாலைக்கு நிரந்தர நியமனம் பெற்ற இரு ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். அனுபவமில்லாத மூன்று தொண்டராசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் கல்வி சற்பிக்கப்படுகின்றது.

இவ் மூன்று ஆசிரியர்களுக்கும் மாணவர்கள் கட்டணம் செலுத்தி வருகின்றனர். இது தொடர்பாக அப்பாடசாலையின் அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டும் எவ்விதமான ஆக்க பூர்வ நடவடிக்கை இது வரை மேற்கொள்ளப்பட வில்லை.

இதேவேளை;

இப்பாடசாலைக் கட்டடம் புனரமைக்கப்படாமல் உள்ளதுடன், மலசல கூட வசதிகள் நீர்த்தாங்கி வசதிகளும் அமைக்கப்படாமல் உள்ளதால் மாணவர் நலன்கள் மேலும் பாதிக்கப்பட்டு வருவதாக அப்பாடசாலை சிறார்களின் பெற்றோர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-12)

### கர்நாடக, தமிழக மாநிலங்களில்

# பரபரப்பை ஏற்படுத்திய ராஜ்குமார் வீரப்பனால் விடுவிக்கப்பட்டார்

## அரசியல் நோக்கர்கள் ஆச்சரியம்!

(புதுடில்லி)

கர்நாடக தமிழக அரசுகளின் அமைதியான ஆட்சிக்கு கடந்த 3 மாதங்களாக பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய நடிகர் ராஜ்குமார் விடுதலை விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இடையில் ஏற்பட்ட தடங்கல்களையும் பொருட்படுத்தாமல் நடிகரின் விடுதலையில் மிகுந்த கவனத்தோடு செயற்பட்டு அவரை மீட்டு வந்துள்ளார்.

நடிகரின் விடுதலைக்கான பேச்சுக்களின் ஆரம்பகர்த்தாவான நக்கீரன்-கோபால் இறுதிக்கட்ட பேச்சுக்களில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த 108 தினங்களாக சந்தனக் கடத்தல் வீரப்பனின் பிடியில் இருந்த கன்னட திரை நட்சத்திரம் ராஜ்குமார் நேற்று காலை விடுதலை செய்யப்பட்டார்.

நடிகர் ராஜ்குமார் ஜூலை 30 ஆம் திகதி அவரது பண்ணை இல்லத்தில் இருந்து மேலும் மூவரோடு வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டமையும் இவர்களில் நாகப்பன் என்பவர் தப்பி ஓடி வந்தமையும், ராஜ்குமாரின் மருமகனான கோவிந்தராஜ் நோய் காரணமாக ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டமையும் தெரிந்ததே.

தற்போது ராஜ்குமாருடன் மூன்றாமவரான நாகேஷ் என்பவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர்களின் விடுதலையை கர்நாடக, தமிழக மாநில முதல்வர்கள் மற்றும் கர்நாடக சட்டசபை அமைச்சர் கௌடா ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நடிகரின் விடுதலைக்காக கர்நாடக தமிழக மாநில அரசுகளின் வேண்டுதலுக்கமைய நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் 5 கட்டங்களாக வீரப்பனுடன் பேச்சுக்கள் நடத்த சென்றமையும், இறுதிக்கட்டப் பேச்சுக்களில் இவர் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் 2 வது முறையாக, ராஜ்குமார் விடுதலை தொடர்பாக சத்தியமங்கலம் காட்டுக்கு பேச்சுக்கள் நடத்தவெனச் சென்ற தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ நெடுமாறன் தலைமையிலான மூவர் குழு வெற்றிவாகை சூடி வந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதேசமயம், ராஜ்குமார் விடுதலைக்காக வீரப்பனால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் நிறைவேற்றப்படாதவை சில காணப்பட்ட போதிலும் இவரின் விடுதலை சாத்தியமானது குறித்து அரசியல் நோக்கர்கள் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர். (உ)

## சிங்கப்பூரில் பாரம்பரிய வைத்தியம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் பாரம்பரிய வைத்தியத் துறையை மேம்படுத்த சட்டம் நிறைவேறியது.

சீன மலே வைத்தியர்களின் பாரம்பரிய வைத்திய முறைகளைச் சிங்கப்பூரில் பேணுவதற்கும் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்காகவும் பாரம்பரிய வைத்திய சட்டம் சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. சுகாதார அமைச்சினால் இது சட்ட வடிவம் பெற்றது. (து)

## உலக தரிசனம்

## அகமதியர் படுகொலைகள் பாகிஸ்தானில் தொடர்கிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அகமதியர் சமயத்தவர்கள் மற்ற இஸ்லாமியர்களால் கொலை செய்யப்படுகிறார்கள்.

சிலமாதங்களுக்கு முன் ஐந்து அகமதியா சமயத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் கடந்தவாரமும் அகமதியாமதத்தினைச் சேர்ந்த மேலும் ஐந்துபேரை ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்துள்ளார்கள்.

நபிநாயகம்அவர்கள்இஸ்லாமியரின் கடைசிப் போதகர் என்று அகமதியா நம்புவதாலேயே இந்தப்படுகொலைகள் இடம்பெறுவதாகவும் இவர்கள் மற்றும் முஸ்லிம்களால் துன்புறுத்தப்படுவதாகவும் கடந்த ஏழு ஆண்டுகளாக பாகிஸ்தானில் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் மனித உரிமைகள்கழகம் இதனை கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# தொலைக் காட்சிகள் மூலம் கிரிக்கெட் மோசடிகள் இடம் பெற்றதாக தகவல்

## இந்திய அதிகாரிகளும் ஈடுபட்டனர்.

(புதுடில்லி)

இந்தியாவில் தொலைக்காட்சி மூலம் கிரிக்கெட் போட்டிகளை ஒளி பரப்பியதில் பல கோடி ரூபா மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்திய தூரதர்சன் இயக்குநர்கள் வேறு தனியார் தொலைக்காட்சியினர் இந்த மோசடியில் ஈடுபட்டதாக மத்திய புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டோரின் வீடுகளைத் திடீர் சோதனை நடத்தியதன் மூலம் மேற்படி விடயம் தெரியவந்துள்ளதாக அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய அரசு தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்ப வேண்டிய கிரிக்கெட்போட்டிகளைத் தனியார்தொலைக்காட்சி நிலையங்களுக்குக் கொடுத்ததன் மூலம்அரசுக்கு சேரவேண்டிய கோடிக்கணக்கான ரூபாய்கள் இழக்க நேரிட்டதென்றும் அதிகாரிகள், மந்திரிகள், கிரிக்கெட் தலைவர்கள் இதில் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்றும் புலனாய்வுத் துறையினர் சந்தேகிக்கின்றனர்.

இதன் விளைவாக பல நகரங்களில் தொலைக் காட்சி நிலையங்களும், தொலைக் காட்சி அதிகாரிகளின் வீடுகளும் சோதனை இடப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர். (து)

# ஒபெக் நாடுகளின் முடிவால் எண்ணெய் விலை ஏற்றம்

(வியன்னா)

ஐரோப்பிய நாடுகளில் அண்மையில் திடீரென பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

ஒபெக் நாடுகளின் கூட்டத்தில் எடுத்த முடிவினை அடுத்தே இந்தத் திடீர்விலையேற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலநாடுகளின் வற்புறுத்தலால் ஒபெக் நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் கூட்டியது அதேவேளைஈராக் போன்றநாடுகளும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை உற்பத்தி செய்ய முன்வந்தன.

இதேவேளை எண்ணெய் வளநாடுகள் அவசரமாக கூடி உலகிலே எண்ணெய் உற்பத்திகூடுவதால். தங்களுடைய இப்போதைய விலையையும் குறைக்க வேண்டிவருமென்பதற்காக உற்பத்தியை குறைப்பதென முடிவெடுத்தன. இதனால் நேற்று முதல் இந்த விலையேற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## முன்னாள் அதிபரின் மகனின்வீடு சுவீகாரம்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவின் இளையமகனின் வீடு அரசால் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தோனேசியாவில் அரச குடும்பத்துக்கு சமமானவரென்க் கருதப்படுபவரான சுஹார்ட்டோவின் இளைய மகன் டாமியின் வீடு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டபோது அவரின் மனைவி வீட்டுப்பத்திரத்தில்கையொப்பமிட மறுத்துவிட்டார்.

நாற்பத்தொன்பது மில்லியன் அரச சொத்துக்களை மோசடி செய்தார் என்றதன் பேரில் இத்தண்டனை வழங்கப்பட்டது.

இருவருக்கும் இந்தவீடு சொந்தமென்று டாமி கையொப்பமிட்டாலும் அவரின் மனைவி கையொப்பமிடாவிட்டால் அது செல்லுபடியாகாதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## ஆஸ்திரியாவில் விபத்து கண்டறிய அரசு முயற்சி

(வியன்னா)

ஆஸ்திரிய அல்பஸ் மலைப் பகுதியில் சுரங்க ரயில் எரிந்ததற்கான காரணத்தைத்தேடுவதில் அரசு முனைந்திருக்கிறது.

இந்த ஆய்வினிடையே இற்றை வரை தொண்ணூறு சடலங்கள் மீட்கப்பட்டனவென்றும் மிகுதிப்பேர் பற்றிய தகவல்கள் மீட்புப்பணி முடிந்த பிறகுதான் தெரியுமென்றும் சொல்லப்படுகிறது.

தொழில் நுட்பக்கோளாறு காரணமாக ரயில்எரிந்திருக்கலாம் என்றும் இதேவேளை குகைக்குள் ரயில் நுழைந்த சிறிது நேரத்திற்குள் புகைமண்டலம் பரவத்தொடங்கிவிட்டதென்றும் இந்த ரயில் எரிபொருள் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும்அல்லதுநீர்த்தன்மையான பிளாஸ்டிக் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஆஸ்திரியப் பொலிஸாரின் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டதாம்.

இதே வேளை இந்த விபத்தில் கருகி மாண்டவர்களிற்கு நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தகுந்த காரணங்கள் கண்டறியப்பட்டதும் உரிய நஷ்டஈடு வழங்கநடவடிக்கை எடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. (து)

## வங்கியாளர் வேலை நிறுத்தம்

இந்தியாவில் அரசவங்கிகள் தேசியமயமாக்கப்படுவதை எதிர்த்து நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் நேற்று நடைபெற்றது.

ஐக்கிய வங்கிகள் யூனியன் மன்றம் இந்த வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்து முன்னின்று நடத்தியது. இதன் காரணமாக வங்கி வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# நேபாளத்தில் ஆரம்பமாகிய சுற்றுப்புறச் சூழல்மகாநாடு

(காட்மண்டு)

சுற்றுப்புற இயற்கை பாதுகாப்பு மகாநாடு நேபாளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

தொடர்ந்து நான்கு நட்கள் இம்மகாநாடு நடைபெற இருக்கிறது.

இயற்கைக்கான உலகளாவிய நிதி மும் உலகில் முக்கிய பதினொரு சமயங்களின் கூட்டமைப்பும் ஏற்பாடு செய்த இந்த மகாநாட்டில் ஐந்நூறுக்கு மேலான பேராளர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மகாநாட்டில் உலகின் இயற்கைப் பாதுகாப்பு,கடல் வளம், காடுபராமரிப்பு சுற்றுச்சூழல் ஆகியன பற்றிய ஆய்வரங்கும் திட்டங்களும் வகுக்கப்பட இருக்கின்றன.

முப்பத்தி மூன்று நாட்டுப் பிரதிநிதிகள் இம்மாகாநாட்டில் கலந்து கொள்ளுகிறார்கள். (து)

## அ. தி. மு க. உறுப்பினர்கள் சட்டசபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்

(சென்னை)

அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தவர்கள் சட்டசபையிலிருந்து வெளி நடப்புச்செய்தார்கள்.

பழ. நெடுமாறனை சத்திய மங்கலம் காட்டிற்கு அனுப்பியிருக்கக்கூடாது என்றும் அவர் தீவிரவாதியென்றும் அவருக்கும் இலங்கைத் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கிறதென்றும் அ இ அ தி மு. க அங்கத்தவர்கள் தமிழக சட்டசபையில் பேசினார்கள்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் முதல்வர் மு. கருணாநிதி பழநெடுமாறன் தீவிரவாதி இல்லையென்றும் இவரைப்போலவே வீரமணி போன்றோர் கருத்துத் தெரிவிப்பார்களென்றும் அவரை சந்தனக் கடத்தல் வீரப்பனிடம் தூதாக விட்டதில் தவறேதும் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதனையடுத்தே தகுந்த பதில் கிடைக்கவில்லையென்பதால் ஜெயலலிதாவின் அ இ அ தி மு. க உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். (து)

# பர்மிய அமைச்சர்கள் சகிதம் துணைத் தளபதி இந்தியா விஜயம்

(புதுடில்லி)

பர்மிய துணைத்தளபதி உட்பட ஆறு அமைச்சர்கள் இந்தியாவிற்கு வந்துள்ளனர்.

சிலநாட்கள் தங்கி பல ஒப்பந்தங்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க இருக்கிறார்கள்.

அமைச்சர்கள் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும்இந்தபேச்சுவார்த்தைகள் நடைபெற இருக்கின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது போதைவஸ்து. கடத்தல் வர்த்தக ஒப்பந்தங்கள், பொருளாதாரப்பரிமாற்றங்கள்,விஞ்ஞான விருத்திகள் பற்றிய விடயங்கள் இடம் பெறவுள்ளன.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் பிரதமர் வாஜ்பாய் ஆகிய முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கஇருக்கிறார்கள். (து)

இன்பம் விழையான் இடும்பை
இயல்பு என்பான்
துன்பம் உறுதல் இலன்.

- குறள்

## வலம்புரி

### உள்வீட்டு எலிகளா?

யாழ் செயலகத்தின் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான பொருட்கள் போனஇடம் தெரியாமல் மாயமாக மறைந்துவிட்டது. காலாகாலமாக ஏழைகளின் நிவாரணப் பொருட்களில் ஏப்பமிட்ட வரலாறு செயலகம் முதல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வரை உண்டென்பதை நம் மறந்துவிட முடியாது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் யுத்தசூழ்நிலையே நிவாரணக் கொடுப்பனவுக்குக் காரணம். அதுவே லொறிலொறியாகப் பொருட்களைவாரிச்சுருட்டுவதற்கும் காரணமாமாயிற்று. அடிக்கடி ஏற்படும் இடப்பெயர்வுகள், ஷெல் சத்தங்கள், போன்றவை கணக்குக் காட்டுவதற்கு உதவிபுரிந்தன

தட்டிக் கேட்பதற்கு ஆளில்லையென்ல் நடப்பதெல்லாம் இப்படித்தானிருக்கும் என்பது முகாமைத்துவக் கருத்து. இதனடிப்படையிலேயே யாழ் செயலகக் களஞ்சியத்தில் பெருந்தொகையான பொருட்கள் மர்மமான முறையில் காணாமல் போனது.

எனினும் இது விடயத்தில் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி மிகக்கரிசனையுடன் நீதியைநிலைநாட்டுவதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளமை ஏழைகளின் கண்களுக்கு ஒளிக்கீற்றைக் காட்டுவதாகவுள்ளது. நீதிமன்றத்தின் தீவிரசெயற்பாட்டை முறியடிப்பதற்காக நகர்த்தப்பட்டவர்களும் ஏழைகள் - அப்பாவிகள் என்பதையெண்ணும்போது நெஞ்சு பொறுக்கவில்லை. குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுவாசல்களை, அங்கு தங்கியிருந்த வயோதிபர்களை பார்ப்பதற்காகச் சென்றபோது இலட்சக்கணக்கான பொருட்களைக் கொள்ளையிட்டாரென மனுநீதிக்குப் புறம்பாக குற்றம் சாட்டப்பட்டு 37 பேர்விளக்கமறியலில் வக்கப்பட்டனர். நீதிவிசாரணையின்போது அவர்களனைவரும் குற்றமற்றவரென விடுதலையாகினர்.

தற்போது விசாரணை தலைகீழாகமாறியுள்ளது. சுமார் 39 இலட்சம் பெறுமதியான பொருட்கள் காணாமற் போனதற்கு உள்வீட்டு எலிகள் காரணமாக இருக்கலாமா என நீதிமன்றம் சந்தேகிக்கின்றது. இச்சந்தேகத்தை தெளிவுபடுத்த நாம் மன்றிற்கு உதவவேண்டும். அதுவே உடனடித்தேவை ஆகும்.

# ஈழத்து தமிழ் கூத்து மரபில் சாதனை படைத்த

# மெற்றாஸ் மயிலின் வேழம்படுத்த வீராங்கனை

**அதி. வண. கலாநிதி சு. ஜெபநேசன்**
**(பேராயர் தென்னிந்திய திருச்சபை)**

ஈழத்துத் தமிழ்க் கூத்து மரபிலே வன்னிப் பிரதேசத்தின் முல்லைத்தீவுத் தமிழ்க் கூத்து மரபுக்கு ஓர் தனித்துவமுண்டு. முல்லையும்-மருதமும்-நெய்தலும் சூழ்ந்த முல்லைத்தீவுப் பிரதேசத்திலே கிராமியப் பண்பாடும், வாழ்வியல் அம்சங்களும் இன்றும் பேணப்பட்டு வருகின்றன.

நாட்டுப்புறவியல் வாழ்க்கையைக் களமாகக்கொண்டு எழுந்தவையே நாட்டார் கலைகளாகும். நாட்டார் கூத்துக்கள், நாட்டார் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் போன்றன இக்கலை மரபுக்குள் உள்ளடங்கப்பெறுகின்றன.

'நாட்டார் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னை புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. இப்பாடல்களின் படைப்பாளர்கள் இம் மண்ணின் மைந்தர்கள் வாயில் பிறந்து செவிதனில் உலவி காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை, என்று பிறந்தது என எடுத்துச் சொல்லவியலாத பண்பும் பாங்கும் பெற்றவை.'

இப்பண்பு பெற்ற நாட்டார் இலக்கியமே 'வேலப் பணிக்கன் ஒப்பாரி' ஆகும். இவ்விலக்கியம் முல்லைத்தீவுப் பிரதேசத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்வியற் கூறுகளின் வெளிப்பாடாக அமைகின்றது. 'வேலப்பணிக்கன் ஒப்பாரியினை' விரித்து அரியானை பொய்கை செல்லத்துரை என்பவர் ஒரு முழு நீளக் கதையை எழுதியிருப்பதாகப்பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்த விரிவாக்கப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்டு 'வேழம் படுத்த வீராங்கனை' என்னும் தலைப்பில் அருணா செல்லத்துரை என்னும் நாடகக் கலைஞர் ஒரு ஒலிப்பதிவு நாடாத் தயாரிப்பை வெளியிட்டுள்ளார்.

இதே நாட்டார் ஒப்பாரியை செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் 'யானையை அடக்கிய அரியாத்தை' எனும் தலைப்பில் 1995 இல் ஓர் ஆய்வு நூலாக வெளியிட்டார். இதே வேலப்பணிக்கன் மனைவி அரியாத்தை கதையை 'வேழம்படுத்த வீராங்கனை என்றதலைப்பில் அரியான் பொய்கை எழுதிய நாட்டார் கூத்தை அரங்கேற்றினார்.

### வடமோடி

முல்லைத்தீவுப் பிரதேசத்தின் தனித்துவம் மிக்க கூத்தாக கண்ணகி வழக்குரையை மையமாகக்கொண்ட 'கோவலன் கூத்து' இடம்பெறுகின்றது. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிற் பொங்கல் உற்சவ காலத்திலே இக் கூத்து நிகழ்த்தப்படுகிறது. முல்லைத்தீவு மக்களால் வடமோடிக் கூத்தாக இது கூறப்படுகின்ற போதிலும் மட்டக்களப்புத் தென்மோடிக்கூத்து மரபினுடைய சாயல்களும் இதிலுண்டு. இக்கூத்து மரபினைச் சிலர் 'முல்லை மோடி' என்று அழைப்பதனையும் செவியுற்று இருக்கிறேன். இதனைவிடக் 'காத்தவராயன் கூத்து' என்ற சிந்து நடைக்கூத்து மதங்கடந்த நிலையிற் செல்வாக்குப் பெற்றுருக்கின்ற ஒரு கூத்து வடிவமாகும். அத்துடன் 'அடங்காப்பற்று' அல்லது 'பண்டார வன்னியன்' கூத்தும் இப்பிரதேசத்திற்குரிய தனித்துவம் மிக்க கூத்துவடிவமாகும். அவ்வரிசையிற் செல்லையா மெற்றாஸ் மயிலினுடைய 'வேழம் படுத்தவீராங்கனை முல்லைத்தீவுப் பிரதேச மண்வாசனை கமழும் ஓர் தனித்துவமான கூத்து வடிவமாகும். வேலப்பணிக்கன் தன் மனைவி அரியாத்தை மீது பாடிய ஒப்பாரியே வேலப்பணிக்கன் ஒப்பாரி ஆகும். இது முதல் முறையாக கூத்து மரபிலே வடிவமைக்கப்பட்டு அரங்கிலே ஏற்றப்படுவது செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களின் தயாரிப்பு நெறியாள்கையில் எனலாம், இவர் ஒரு சிறந்த தயாரிப்பாளர், சிறந்த நெறியாளர், சிறந்த கூத்துக் கலைஞர் என்பதற்கு சான்றாக 'வேழம்படுத்த வீராங்கனை' என்ற ஆட்ட நாட்டுக்கூத்து திகழ்கிறது.

### ஒல்லாந்தருடன் சம்பந்தம்

வேழம்படுத்த வீராங்கனையின் கதை வரலாறு கி.பி 17ம் நூற்றாண்டினை உட்படுத்திய ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியோடு சம்பந்தப்பட்டு காணப்படுகிறது. வரலாற்றுச் சுருக்கமாக நோக்குவது பொருத்தமானதாகும். குமுழமுனையைச் சின்ன வன்னியன் என்ற குறுநில அரசன் ஆண்டு வந்தான். தமது பகுதியிலுள்ள யானைகளைப் பிடித்து வெளிநாடுகளுக்குக் கொடுத்து பண்டமாற்று செய்வது அவனது வழக்கமாகும்.

யானைப்பணிக்கர் எனும் குலத்தவரின் துணையை நாடியே இப்பண்ட மாற்றினை செய்து வந்தான். யானை பிடிக்கும் தொழிலை செய்யும் பணிக்கர் குலம் செம்மலையில் வாழ்ந்து வந்தது. (குமுழமுனை) ஒரு சமயம் ஒருவராலும் பிடிக்க முடியாத கொம்பன் யானையை எப்படிப் பிடிக்கலாம் என பணிக்கர் எல்லோரும் கூடி யோசித்தனர். இந்த யானை மக்களுக்குப் பல பேரழிவுகளை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. ஏழூர் பணிக்கருள் ஒருவர் 'வேலப்பணிக்கன்' என்பான் பிடிப்பான் என்று கூறினான் மற்றொருவன் 'இல்லை யில்லை வேலப்பணிக்கன் பிடிக்கமாட்டான் அவனது பெண்சாதிதான் பிடிப்பாள்' என்று கூறினான். கூட்டம் முடிந்தது. வேலப்பணிக்கன் மனந்தளர்ந்து வீடு சென்றான். வீடு சென்ற வேலப் பணிக்கன் சாப்பிடவில்லை கவலையாய்ப் படுத்து விட்டான். விபரமறிந்த வேலப்பணிக்கன் மனைவி அரியாத்தை விரதமிருந்து முழுகி வார்க்கயிறு அங்குசம் போன்ற யானை பிடிக்கும் உபகரணங்களுடன் வெளிச் சென்று குமுழமுனையிலுள்ள பொட்டுக்கிணற்றடி விநாயகரை வணங்கி விட்டுக் காலடி வைத்த போது புடையன் பாம்பு ஒன்று வழிமறித்துக் கிடந்தது. நாகதம்பிரானை வழிபடவே பாம்பு வழிவிட்டது. சென்ற அரியாத்தை கண்டல் எனும் இடத்தை அடைந்தாள். அரியாத்தையைக் கண்டு கோபங்கொண்ட யானை துதிக்கையை உயர்த்தியவாறு அரியாத்தையை நோக்கி ஓடி வந்தது. 'ஆதி ஐயன் அறிய ஒன்றும் செய்யாதே' என்று அரியாத்தை சத்தியம் செய்யவே யானை துதிக்கையை உயர்த்தி முட்டுக்காலில் இருந்து தலைதாழ்த்தி வணங்கியது. இது தான் சமயமென அரியாத்தை வார்க்கயிற்றைக் கொழுவிப் பின்னர் பண்டாரவன்னியன் வளவு என அழைக்கப்பட்ட இடத்தில் (குமுழமுனையில்) யானையைக் கட்டினாள்.

சின்னவன்னியன் அரியாத்தையின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டிப் பரிசளித்து விருந்தளித்துக் கௌரவித்தான். விருந்தின் முடிவில் யாரோ ஒரு பணிக்கன் அவமான உணர்வில் வெற்றிலையில் நஞ்சைத் தடவிக் கொடுக்கவே ஒன்றுமறியாத அரியாத்தை அதையுண்டு சிறிது வேளையில் மயங்கி விழுந்து இறந்துவிட்டாள். யானைக்கு கிட்ட நெருங்க யாருக்கும் முடியாததனால் கட்டிய இடத்திலேயே அதுவும் மாண்டது.

அரியாத்தை இறந்த பின்பு ஆற்றாத துன்பத்தால் அவளுடன் உடன்கட்டை ஏறுவதற்காக வேலப்பணிக்கன் முனைகின்றான். அதையறிந்த மக்கள் அவனை ஒரு இடத்திலே பிடித்துக் கட்டி விட்டு அரியாத்தையின் உடலை எரிப்பதற்காக எடுத்துச் செல்கின்றனர். அப்போது வேலப்பணிக்கன் துன்பமுடன் கதறுகிறான்.

கற்புடையாள் நீரானால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே
என்னுடைய கையில் கட்டுத்தெறியாதோ'
அவ்வாறு
'கலங்கியழும் பொழுது வேலப் பணிக்கனுடைய கைக்கட்டு தெறித்திட்டது.

கட்டுக்கள் அறுந்திடவே வேலப்பணிக்கன் அரியாத்தையுடன் உடன் கட்டை ஏறினான். அவளுடைய இறந்த உடலும் தீயிலிருந்து எழுந்து அவனை அணைத்துக் கொண்டதாக கதை நிறைவு பெறுகின்றது.

கதைப்பாடல்கள் மக்களை மகிழ்விக்கும் வாய்மொழிக் காப்பியங்களாகையால் சில கதை அம்சங்களும் கதைக் கேற்றவாறு மாற்றப்படுகின்றன. அத்தன்மை 'வேழம் படுத்த வீராங்கனை' யிலும் உண்டு. பேராசிரியர் சு வித்தியானந்தன் அவர்களது நாட்டுக் கூத்து புத்துருவாக்க முயற்சியின் பின் வட்டக்களரியிலே பாடப்பட்டு வந்த நாட்டுக் கூத்துப் படச்சட்ட மேடையிலே நிகழத் தொடங்கியது.

படச்சட்ட மேடையிலே இக் கூத்தினை செ. மெற்றாஸ் மயில் அவர்கள் நெறிப்படுத்தியிருக்கும் விதம் பாராட்டுவதற்குரியது. நாட்டுக்கூத்தின்உயிர் நடிதாளக் கட்டு சிதைவுறாது எல்லா நடிகர்களுமே ஆடும் விதம் அலாதியானது. சின்ன வன்னியனாகத் தோன்றும் செ. மெற்றாஸ் மயிலின் வரவு ஆட்டத்திலிருந்து நிறைவு வரை ஒரு நாட்டுக் கூத்துக் கலைஞனுக்குரிய அனுபவ முதிர்ச்சி தென்படுகிறது. அடிக் கொண்டே பாடுந்திறன், ஆடல் வேகம், ஆடல் நுணுக்கம், அசுற்குளாற் புலப்படும் நடிப்புத்திறன், பாத்திர இயை பாக்கம் எல்லாமே அற்புதமானவை.

மரபுவழி நாட்டுக்கூத்திலே ஆண்களே பெண் பாத்திரமேற்று நடிப்பார்கள். நாட்டுக் கூத்து மறுமலர்ச்சிக்குப் பின் பெண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடிக்கத் தொடங்கினர். இத்தன்மை நாட்டுக்கூத்து மரபிலே ஓர் புத்துருவாக்கத்தினை ஏற்படுத்தியது. 'வேழம்படுத்த வீராங்கனை' யிற் பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்றுள்ளனர். யானையை அடக்கிய அரியாத்தையாக ஆடிய செல்வி. சி. தாட்சாயினி அற்புதமாக நடித்துள்ளார். ஆடற் திறனோடு சாரீர வளமும் அவரை முத்திரை பதிக்க வைத்தது. வேழம்படுத்த வீராங்கனையாகவே காட்சி தந்தார். சின்ன வன்னியனின் தேவியாக ஆடிய செல்வி. த திவ்ஜ ஞ்சலியின் ஆடல் லாவகம் நயக்கத்தக்கது.

ஏழூர் பணிக்கரின் வரவுத் தருக்கள் வேகமும் விறுவிறுப்புடையவை வேலப்பணிக்கனாக தோன்றும்வ த நிதி நீலப்பணிக்கனாக தோன்றும் ஜே. ஜோன்சன் ராஜ்குமார் சபையை களைகட்ட வைத்தனர். பொருத்தமான பாத்திர தேர்வுகள். ஒரு நாடக நெறியாளனின் நாடக வெற்றிக்குக் காரணம் பொருத்தமான பாத்திரத்தேர்வாகும் இதுவே செ மெற்றாஸ் மயிலின் வெற்றிக்குக் காரணமாகிறது.

கட்டியக்காரனே நாட்டுக் கூத்தை நடத்திச் செல்பவன். அவ்வகையில் இக் கூத்திலே கட்டியக்காரனாக தோன்றும் மோகனதாஸ் கட்டியக் காரனுக்குரிய ஆடல் மரபை அப்படியேபேணி ஆடினார். நீலப்பணிக்கன் மனைவி நீலகேசரியாகத் தோன்றியவர் பாத்திரத்தன்மையை அப்படியே புலப்படுத்தினார். மந்திரி, குடிமகன் பணிக்கர்கள் யாவருமே பாத்திரத்தன்மையை உணர்ந்து ஆடினர்.

(3ம் பக்கம் பார்க்க)

### சாயி அருளமுதம்



பெற்றோர்கள் இந்த உடலை அளித்து அதனுள் குடி கொண்டிருக்கும் புத்தியையும் அன்பையும் போஷித்து வளர்த்தார்கள். ஆகவே அவர்களுக்கு உங்கள் நன்றி உரியதாகும். உங்களை உருவாக்கிய மானிட உருவிலிருக்கும் பெற்றோர்களை நீங்கள் மதிக்காவிடின் தெய்வ வடிவிலுள்ள சிருஷ்டி கர்த்தாவை மதிப்பதற்கு நீங்கள் எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்? அது மட்டுமன்றி இறைவனுடைய பெருமையையும் அவரைத் தொழும் முறையினையும் உங்களுக்கு அறியத் தருபவர்கள் உங்கள் பெற்றோர்களோடு நீங்கள் முதன் முதலாக எதிர்கொள்ளும் அதிகாரத்தின் பிரதிநிதிகளும் அவர்கள் தான். அந்த அதிகாரம் அன்பு, சிரத்தை என்பவற்றினால் தணிக்கப்பட்ட தொன்றாகும். அந்த அதிகாரத்துக்குத் தலை வணங்கக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது இறைவனிடம் பணிவதற்குக் கற்றுக்கொள் வீர்கள்.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

**மாணவரின் சுய ஆற்றலை மேம்படுத்தும் 'யாழ். தொழில்நுட்பக் கல்லூரி கற்கைநெறி'க்கானகட்டுரைநாளை பிரசுரமாகும்.**

# காங்கிரஸின் தலைவராக சோனியா தெரிவானார்



(கொழும்பு)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக சோனியா காந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவரான இவர், காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட ஜிதேந்திரபிரசாத்தை மிக எளிதாக தோற்கடித்து அமோக வெற்றியீட்டியுள்ளார்.

கட்சியின் தேசிய தேர்தல் சபையளித்த 7542 வாக்குகளில் 7248 வாக்குகளைப் பெற்று சோனியா காந்தி தலைவராக தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

காங்கிரஸ் கட்சியின் தலைமை காலங்காலமாக நேரு குடும்பத்துக்கே கிடைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். (ந 2)

# ஜனாதிபதி-அமைச்சர்கள் சந்திப்பு
# புதிய திட்டங்கள் தயாரிக்கப்படும்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்களை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்று அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது அரசாங்கத்தின் அடுத்த ஆறாண்டு காலத்திற்குள் ஒவ்வொரு அமைச்சுக்களும் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவான முறையில் கலந்துரையாடப்பட்டது.

இக் கூட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

21 ஆம் நூற்றாண்டிற்கான புதிய அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், மக்களுடைய தேவைகளை, அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் அமைய வேண்டுமென வலியுறுத்தி கூறியிருப்பதுடன் பத்து நாட்களுக்குள் இத்திட்டங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ)

# கல்விமாணி நுழைவுதேர்வு சனிக்கிழமை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கல்வி மாணி நுழைவுத் தேர்வுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமைகாலை யாழ். இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் அவர்களுடைய முகவரிக்கு தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு, எழுவைதீவு, நயினாதீவு, அனலைதீவைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தத்தம் அனுமதி அட்டைகளை நாளை வெள்ளிக்கிழமை யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒருமணி நேரம் முன்னதாக சமுகமளிக்கவேண்டும்,

இதேவேளை பரீட்சைக் கட்டணமாக 200 ரூபாவை மேற்பார்வையாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்று அனுமதியட்டையின் பின்புறத்தில் ஒட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# நல்லூர்; கல்வியங்காடு நேற்று சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்வியங்காடு, அடியபாதம் வீதி, இராச வீதி, கட்டப்பிராய் மற்றும் முத்திரைச்சந்திப் பகுதிகள் நேற்றுக்காலை 5 30 மணியளவில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இந் நடவடிக்கையில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் ஈடுபட்டனர்.

இப் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் சென்ற படையினர் வீட்டிலுள்ளவர்களின் அடையாள அட்டைகளை வாங்கிச் சென்று, அவர்களை 'நல்லூர் முருகன் ஆலயம்' மற்றும் 'கிட்டு பூங்கா' ஆகிய இடங்களுக்கு வரும்படி கூறிச் சென்றனர்.

குறித்த இடங்களிற்கு சென்ற பொதுமக்களை தீவிர விசாரணைக்குட்படுத்தியதுடன் வீடியோப் படமும் எடுத்தனர். பின்பு 11.30 மணியளவில் அனைவரும் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் பதற்றநிலையேற்பட்டதோடு இப்பாதையூடான போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தது. (ஸ்ரீ-42-43-57)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய அதிபர் ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் வலிமேற்குக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார். (ந-2)

## பிரி.வெ.விவ...

கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் பிரித்தானியாவுக்குமேற்கொண்ட விஜயத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைபிரித்தானியாவில் தடை செய்யுமாறும், அதன் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டமையை அடுத்து பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வரவுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி உட்பட சகல அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவிருப்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இருக்குமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொழும்புக்கு வருகைதரும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் 22 - ந் திகதி புதன்கிழமை கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் பிற்பகல் 3-15 மணிக்கு தமிழ்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய நிலை பற்றிப் பேசவுள்ளார்.

அமைச்சரின் இச் சந்திப்பிற்கான அழைப்புக்களை பிரித்தானிய தூதரகம் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல் எவ், ரெலோ ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

### ஹெயின்

பிரித்தானியா வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் சுமார் ஒருவாரகாலம் கொழும்பில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வு விடயம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடனும் அரசுடனும் நோர்வே அரசின் விஷேட தூதுவர் எரிக் சோல்ஹைம் நேரடியான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வரும் இவ்வேளையில் பிரித்தானிய வெளிவிவகாரம் மற்றும் காமன்வெல்த் அமைப்பின் பொறுப்பான அமைச்சருமான பீற்றர் ஹெயின் கொழும்பு விஜயம் பல்வேறு வழியிலும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (வ)

# ரெலோ உறுப்பினர் நால்வர் நீக்கப்பட்டனர்

(மட்டக்களப்பு)

ரெலோ அமைப்பின் மட்டக்களப்பு ஆரையம்பதிப் பொறுப்பாளர் வரதன் உட்பட நான்கு உறுப்பினர்களை கட்சியிலிருந்து விலக்கியுள்ளதாக அக்கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அறிவித்துள்ளார்.

பொதுமக்களுடன் முறைகேடாக நடந்துகொண்டமையினாலேயே இந்நால்வரும் கட்சியிலிருந்து விலக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலக்கப்பட்டவர்களில் வரதன் கடந்த தேர்தலில்போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

# பதவி வெற்றிடம் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரச திணைக்களங்களில் சகல தரங்களிலுமுள்ள பதவி வெற்றிடங்கள் பற்றிய விபரங்களை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

சேவையின் பெயர், அனுமதிக்கப்பட்ட ஆளணி, தற்போதுள்ளவர்களின் தொகை வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகிய தரவுகளை உள்ளூர்த் திணைக்களத் தலைவர்கள் மிக அவசரமாகச் சேகரித்து உடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-12)

# ஜி.எஸ்.ரியில் இருந்து விலக்களிக்கவும்

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கப்பல்மூலம் உணவுப் பொருள் எடுத்துவரும்போது அதற்கான பொருட்கள் சேவைகள் மீதான வரியில் இருந்துவிலக்களிக்கவேண்டும் என்று ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் சேவைகள் மீதான வரியை விலக்குமாறு 1998ஆம் ஆண்டும் ஜனாதிபதிக்கு சி.வி.கே. சிவஞானம் கடிதம் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயப்பாடசாலை அதிபர்கள் குணநல வள உள்ளீட்டுக் கணக்கை வங்கியில் திறப்பதற்குரிய படிவங்களுடன் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலய கல்விபணிமனையின் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளருடன் நாளை காலை 10 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளா கேட்டுள்ளர். (ந-2)

## கலந்துரையாடல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபையின் 2001 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று (16-11-2000) பி.ப. 3.00 மணிக்கு நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உபஅலுவலக பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஆலய பரிபாலன சபைகள் என்பன கலந்து கொள்கின்றன. (ச-103)

## திருத்தம்

வலம்புரியில் நேற்று வெளியான ''மகாநதி உரிமையாளர் கைது'' என்றசெய்தியில் மகாநதி நகைக்கடை என்பதற்குப் பதிலாக மகாநதி புடவைக் கடை என பிரசுரமாகிவிட்டது. அதனை வாசகர்கள் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## விமானங்கள் குண்டுவீசின

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 'மிக்' ரக குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் மிகவும் தாழப்பறந்து நான்கு குண்டுகளை வீசித்தள்ளின.

இக்குண்டுகள் யாவும் கல்முனைப் பகுதி மற்றும் பூநகரி பள்ளிக்குடாப் பகுதிகளை மையமாக வைத்து வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவரவில்லை. (வ)

## கலை - வர்த்தக...

மைத்துவ, வர்த்தக பீட மாணவர்கள், கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களை தடிகள் மற்றும்பலகைகளால் கண் மூடித்தனமாகத் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் இடம் பெற்ற போது பல்கலைக் கழகத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் மாணவர்கள் வளாகத்தை விட்டு வெளியேறி வீதிகளில் நின்று மோதிக்கொண்டனர்.

இச் சம்பவம் குறித்து ஆராயும் பொருட்டு மாணவர் ஒன்றியம் இன்று அவசரமாக கூடுகிறது (ந-114)

## ஐந்து ..

ரும கருத்து வெளியிட்டுள்ளனர்.

வழமையாக நெடுந்தீவு-ஊர்காவற்றுறைக்கும் சேவையில்ஈடுபட்டு வரும் 'குமுதினி' படகு இரவு வேளைகளில் நயினா தீவில் தரித்து நிற்பது வழக்கம்.

இதனால் குறிப்பிட்ட சம்பவத்தின் போது படகை நெடுந்தீவிற்கு கொண்டு வர முடியாமல் போனதாலேயே இம்மரணப் இடம் பெற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்திருப்பதும் நோக்கத்தக்கது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச உயர் அதிகாரிகள், மற்றும் பொது அமைப்பினர் இணைந்து செயலாற்றுவதன் மூலமே இதுபோன்ற மரணங்களைத் தவிர்க்க முடியும் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. (க)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

எழுதுமட்டுவாள் பகுதியில் கடந்த 13ஆம் திகதி இடம் பெற்ற மோதல் சம்பவத்தில்

● இறைமதி. தனபாலன் கனகராணி (யாழ்ப்பாணம்) என்றபோராளியும். கடந்த 14 ஆம் திகதி மணலாற்றில் இடம்பெற்ற மோதலில்.

● கந்தக்குட்டி ஜெகநாதன் (அம்பாறை) என்ற போராளியும் உயிரிழந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர். (ம)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே
10.30மட்டும்
ராம்கி, மீனா, விவேக்
நடிப்பில்
பாலையத்து
அம்மன்
[கி-688] 2.30மட்டும்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.